முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1086

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.09.2022, திங்கட்கிழமை

1. பிரம்ம ரகசியம் கண்ட அரங்கா
பிரம்ம சூட்சுமம் தெளிந்த தேசிகா
வரம்பல பெற்று என் சக்தியாக
வாழுகின்ற குருராஜா அரசனே உமை போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 02 நாள், 19.09.2022 திங்கட்கிழமை)
ஆற்றல்பட அரங்கன் தர்மமே
அகிலத்தை மாற்றி அமைக்கும்
3. அமைக்குமப்பா அரங்கன் தொண்டர் படையே
அகிலமெங்கும் ஞான ஆட்சி தனை உருவாக்கும்
இமைக்காமல் அரங்கன் காத்துவருகின்ற
இந்த லோகம் இனி சர்வ பாதுகாப்பும் பெறக்கூடும்
4. கூடவே அரங்கனின் தவத்தால்
குவலயத்தில் ஞானவான்களாக மக்கள் மாற்றம் கண்டு
கண்டுமே யான் தந்த அரங்கன் வழி வரத்தால்
உலகோர்க்கு ஞான சித்தியோடு உயர்வான தர்மஞான வழிகளை கடைபிடிக்கும்
5. கடைபிடிக்கும் உயர் சிந்தைகள் பெருகி
கலியுகமே தர்மஞான யுகமாக மாற்றம் பெறும்
ஆகவே அரங்கன் திருவடி பற்றினால்
அகிலத்துக்கு பாதுகாப்பு உண்டு உண்டு
6. மிகைபட இந்த மாற்றங்கள் நடக்க
மக்களே அரங்கன் ஞான வழிக்கு வரவேண்டும்
வேண்டிவேண்டி அன்பர்கள் தொடர
வினையில்லாத ஞான உலகம் சடுதி அரங்கனால் அமையும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–